1992 ஜனவரி 31] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

அதுமட்டுமல்லாமல் புதிதாக அதிகாரிகள் ரேஷன் கார்டுகளை வாங்கி 200 ரூபாய், 250 ரூபாய் வருவாய் என்றிருந்த இடத்திலே எல்லாம் 350 ரூபாய், 400 ரூபாய் என்று புதிதாக மாற்றம் செய்திருக்கிறார்கள். எனவே அந்த வகையில் பலர் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இலவச வேஷ்டி, சேலைகள் கொடுக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் என்றவுடன் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவில் அவர்கள் எல்லாம் வந்துவிடுவார்கள். அப்படி எங்கேயாவது கிடைக்கவில்லை என்றால் இன்றைக்கு நான் சொல்கிறபோது ஏறக்குறைய அறுபத்திரண்டு இலட்சம் பேருக்குக் கிடைக்கவில்லை என்றால் கொடுக்கப்படாதவர்கள் எல்லாம் அந்தப் பட்டியலில்தான் இருப்பார்கள். அந்தப் பட்டியலிலே இருப்பவர்களுக்கு எல்லாம் கொடுக்க வேண்டிய முயற்சிகளை முதலமைச்சருடைய உத்தரவு வந்தவுடன் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பி. அண்ட் சி. ஆலை திறக்கப்பட நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை நகரத்தில் உள்ள பி. அண்ட் சி. ஆலை மூடப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்று திரு. அ. செல்வராசன், திரு. இளம்வழுதி, திருமதி இலதா பிரியகுமார், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் என்னிடத்தில் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி சுருக்கமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. அ. செல்வராசன்.

[1992 ஜனவரி 31

திரு. அ. செல்வராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. இளம்வழுதி அவர்கள் பேசுவார்கள் ஏனென்றால் அவர் தான் [redacted]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கிளப்பவில்லை என்றால் நான் தம்புசாமி அவர்களைக் கூப்பிட வேண்டி இருக்கும். நீங்கள் முன் வரிசையில் இருக்கிறீர்கள் என்பதற் காகத்தான் உங்களை முன்னுரிமை கொடுத்து கூப்பிட்டேன். (குறுக்கீடு) அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. தம்புசாமி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். முன் வரிசையில் இருக் கிறீர்கள் என்பதற்காக உங்களைப் பேசச் சொல்கிறேன். (குறுக் கீடு) கட்சிக்கு ஒருவர் என்று பேசுவதில்லை இதிலே.

திரு. அ. செல்வராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே உள்ள பிரச்சினை இது. எனவே அவர் தான் கொடுத்திருக்கிறார். அவர்தான் பேசவேண்டும். விதி 56-இல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது 56-இல் வரவில்லை. (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

பிற்பகல் 4-40

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சென்னையில் உள்ள பி. அண்டு சி. மில் கடந்த 1—4—1991 மூடப்பட்டுள்ளது. இது ஒரு நிறுவனத்திற்கு சொந்தமானது ஆகும். ஏறத்தாழ அந்த மில் 117 ஆண்டுகால பாரம்பரியம் மிக்கது. அந்த பி. அண்டு சி. மில் இப்போது சட்ட விரோத மாக மூடப்பட்டு, ஏறத்தாழ 8 ஆயிரம் தொழிலாளர்களும், அவர் களுடைய குடும்பங்களும் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு 7—9—1991 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த பகிரங்க வேண்டுகோள் ‘தொழிலாளர்கள் குடும்பங்கள் மகிழ்ச்சியடையும்படியான ஒரு தகுந்த முடிவை விரைவிலே அரசு எடுக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது’ என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை

யிலும் அந்த ஆலை திறக்கப்படவில்லை. அப்படி திறக்கப்படாத காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள் முழுமையும் பட்டினி கிடக்கக்கூடிய ஒரு அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதோடு கூட அந்த மில்லின் ஒரு பகுதியை புவனகிரிக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அது தொழில் கோர்ட்டு மூலம் மாற்றக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு, இப்போது மீண்டும் மாற்றுவதற்கான ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. இப்படி தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கக் கூடிய இந்த ஆலையைத் திறப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது 56 வது விதியின் கீழ் எடுக்கப்படுகிற ஒரு பொருள் அல்ல. அந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர அனுமதிக்கிறேன். ஆகவே முன் வரிசையில் இருக்கின்ற திரு. தம்புசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு. செல்வராசன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு முன் உரிமை கொடுத்தேன். ஆகவேதான் அவர் பேசுகிறார். உங்களுக்கு அதனுடைய பதில் வர வேண்டும். அவ்வளவுதானே

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் வேலை பார்க்கின்றவர்கள், அந்த மூடப்பட்ட தொழிற்சாலையின் தொழிலாளர்கள் பெருமளவுக்கு என்னுடைய தொகுதி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அந்த மாதிரி அல்ல, அந்த மாதிரி என்றால் திரு. ரங்கநாதன் இருக்கிறார் திரு. ரங்கநாதன் அந்தத் தொகுதி என்று கேட்கிறார். அது சொல்ல முடியாது.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை 56-வது விதியின் கீழ் எடுக்கவில்லை. ஒரு சிறப்பு கவன ஈர்ப்பு போல நம்முடைய விதிக்கு அப்பாற்பட்டு, பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி அது என்ன பிரச்சினை என்று சொல்வதற்குத்தான் அனுமதித்து இருக்கிறேன். அதற்குப் பதில் வரும். பதிலுக்குப் பிறகு நீங்கள் வேறு ஏதாவது சொல்லலாம்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அந்த மாதிரி அனுமதிப்பதற்கில்லை. நான் அனுமதித்தால்தான் பேசவேண்டும். உட்காருங்கள். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள் என்ற செய்தியை அவைக்கு சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரம்பூரில் உள்ள பி. அண்டு சி., ஆலை 1—4—1991 முதல் இயங்காமல் இருந்து வருகிறது. 8 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்ட இந்த ஆலையை மூடுவதற்கு அனுமதி கோரி நிர்வாகம் தொழிலாளர் தகராறு சட்டப் பிரிவு 25-ஓ-ன் கீழ் விண்ணப்பம் செய்திருந்தது. இந்த ஆலையை மூட அனுமதி மறுத்து தொழிலாளர் ஆணையர் 8—2—1991-ல் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் ஆணை பிறப்பித்தார். இதன்பின், நிர்வாகம் ஆலையை 1—4—1991 முதல் மூடியது. ஆலையை மூடியதை எதிர்த்து, மெட்ராஸ் லேபர் யூனியன் மற்றும் பி. அண்டு சி. ஸ்டாப் யூனியன் ஆகிய இரு தொழிற் சங்கங்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் மற்றும் மேல் முறையீடுகளை தாக்கல் செய்தன.

மில்லின் துணி பதப்படுத்தும் பிரிவை தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள புவனகிரிக்கு மாற்றவேண்டும் என நிர்வாகம் கோருகிறது. தொழில் சங்கமோ இந்த பதப்படுத்தும் பிரிவை சென்னையிலேயே தொடர்ந்து நடத்தவேண்டுமென கோரியது. இவ்வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம்,

1992 ஜனவரி 31] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

சென்னை தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து, 8—1—1992-ல் பிறப்பித்த உத்தரவை தள்ளி வைத்து, நிர்வாகத்தினர் ஆலையை மூட அனுமதி கோரி விண்ணப்பித்த மனுவின் மீது மறுபடியும் விசாரணை செய்து புதிதாக ஆணை பிறப்பிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அவ்வாணைக்கு இணங்க தொழிலாளர் தகராறு சட்டப்பிரிவு 25-ஓ-ன் கீழ் விசாரித்த தொழிலாளர் ஆணையர் ஆலையை மூட அனுமதி மறுத்து 22—11—1991-ல் புதிதாக ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்கள். அதே ஆணையில் ஆலையின் துணி பதனப்படுத்தும் பிரிவை நிர்வாகம் புவனகிரிக்கு மாற்றலாம் எனவும் ஆணையர் அனுமதி அளித்திருந்தார். தொழிலாளர் ஆணையர் பிறப்பித்த இந்த ஆணையை எதிர்த்து நிர்வாகமும் தொழிற்சங்கங்களும் மறு ஆய்வு மனுக்களை அரசுக்கு சமர்ப்பித்தன. இந்த மறு ஆய்வு மனுக்கள் மீது தொழிலாளர் துறைச் செயலாளர் இரு தரப்பார்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளித்து விசாரணை நடத்தினார். இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதியையும் இது சம்பந்தமாக தொழிலாளர் நல செயலாளர் விசாரணை செய்து முடித்துள்ளார். இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 4—2—1992 அன்று நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

2. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி எ. எஸ். பொன்னம்மாள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த submission -ஐ நீங்கள் என்னிடம் முன்பே கேட்டிருக்க வேண்டும். என்ன Submission என்று எனக்குத் தெரியாத நிலையிலே. . .